விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 179 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 02 செவ்வாய்க்கிழமை (16.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக வலி.வடக்கு மக்கள் போராட்டம்

### பலாலி சந்தியிலும் முன்னெடுக்கப்பட்டது





02ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி நேற்றும் 5 என்புக்கூடுகள்

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றுத் திங்கட்கிழமை சிறுவர்களது என்புக்கூடுகள் உள்ளடங்கலாக 10 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் 15ஆம் பக்கம் பார்க்க



## ஏறுமுகத்தில் கொழும்பு பங்குச்சந்தை




(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று (15) அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், அனைத்துப்பங்கு விலைச் சுட்டெண் 743.22 புள்ளிகளால் அதிகரித்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

### - உயிர்த்த ஞாயிறு தாக்குதல் -

# விசாரணைகளை குலைக்க அரசியல் குழுக்கள் முயற்சி

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பகிரங்கம்

(கண்டி)

அரசியல் குழுக்களைப் பயன்படுத்தி உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளைக் குலைக்க முயற்சிப்பது யாருக்கும் நன்மையளிக்காது என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## ஹேமசிறி வழக்கு ஜூலை 31இல் தீர்ப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 15ஆம் பக்கம் பார்க்க

## விஜிதமுனி சொய்சாவிடம் எப்.சி.ஐ.டி விசாரணை



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜிதமுனி சொய்சாவிடம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.

நிதிக் குற்றப் புலனாய்வுப் 15ஆம் பக்கம் பார்க்க

உயர்தரப் பரீட்சையை

## ஒத்திவைக்காவிடின் சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்ட 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா தனியார் தாதியர் கல்லூரியில் குழப்பம்; ஐவர் கைது

(வவுனியா)

வவுனியா வைரவப்புளியங்குளம் 7ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள தனியார் தாதியர் கல்லூரியில் நேற்று மாணவர்களுக்கும் அதன் நிர்வாகத்துக்குமிடையே குழப்பநிலை ஏற்பட்டதால் நிலைமையைக் கட்டுப் 16ஆம் பக்கம் பார்க்க

### மாணவி வித்தியா படுகொலை

## குற்றவாளிகளின் மரண தண்டனை யாழ்.மேல்நீதிமன்றில் மீள உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு, கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், குற்றவாளிகளுக்கான உயர் நீதிமன்றில் உறுதி செய்யப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று (15) திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக வாசித்து உறுதிப் படுத்தியுள்ளது.

முன்பதாக 16ஆம் பக்கம் பார்க்க

## உதய கம்மன்பில, வீரவன்ஸ, திலித் ஆகியோருக்கு எதிராக விசாரணை

### நீதிமன்றில் சி.ஐ.டி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர உள்ளிட்ட குழுவினருக்கு 02ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 கொலைக்குற்றங்களுடன் பிள்ளையான் 07 கொலைக்குற்றங்களுடன் இனியபாரதி

## குற்றப்புலனாய்வுத்துறை தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சு.ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எனும் பிள்ளையான் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலாளிகள் எனக் கூறப்படும் இருவரை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், பிள்ளையான் கடந்த ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சு.ரவீந்திரநாத் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் மீது சந்தேகம் வெளியிடப்பட்டிருந்த நிலையில்,

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், மட்டக்களப்பு மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஐந்து முக்கிய மனிதக்கொலைச் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவற்றில் 2006ஆம் ஆண்டு கல்லடியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம், கப்பம் கோரப்பட்ட பணத்தை வழங்க மறுத்த வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம், கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளின் பின்னணியில் TMVP உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பேராசிரியர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் உள்ளிட்டவை அடங்குவதாகக் கூறப்படுகிறது.

இந்த வழக்குகளுடன் தொடர்புடையவர்களாகக் கூறப்படும் காத்தான்குடியைச் சேர்ந்த முகமது சிபான் மற்றும் முகமது சகீத் ஆகியோரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவருக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முன்னேற்றம் தொடர்பான விசேட அறிக்கை நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பாதுகாப்புக்காரணங்களால் பிள்ளையானை நேரில் நீதிமன்றத்திற்கு அழைத்து வர முடியவில்லை என சி.ஐ.டி தெரிவித்ததையடுத்து, அவர் இணையவழி (Zoom) மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளில் இணைக்கப்பட்டார்.

வழக்கைப் பரிசீலித்த நீதிவான், பிள்ளையான் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதற்கிடையில், பிள்ளையானின் நெருங்கிய ஆதரவாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இனியபாரதி என அழைக்கப்படும் கே.புஷ்பகுமார் மீது ஏழு மனிதக் கொலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2022ஆம் ஆண்டு அக்கரைப்பற்று நீதிமன்ற ஆவணக் காப்பகத்திற்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடனும் பிள்ளையான் தரப்பினருக்கு தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுகளின் பேரிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ந-7)

## யாழ்.மாவட்ட...

யாழ்ப்பாணம் வலி.வடக்கு பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, 36 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தம்மை மீள் குடியேற்றக் கோரி நேற்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாகவும் பலாலி சந்திக்கு அருகிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யுத்தம் காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி வலி. வடக்கு பிரதேச மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில் இன்று, அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு 36 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 17ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் அப்பகுதி மக்கள் இன்னமும் மீள் குடியேற அனுமதிக்காது, அப்பகுதி மக்களின் காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமது காணிகளிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, தம்மைத்தமது சொந்த இடங்களில் மீள் குடியேற அனுமதிக்க வேண்டும் எனக் கோரியே யாழ்மாவட்ட செயலகம் முன்பாகவும் பலாலி சந்திக்கு அருகிலும் மக்களால்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது தமது காணி விடுவிப்புத் தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜரை அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் ஆகியோரிடமும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்களிடமும் கையளித்தனர்.

குறித்த போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், மதத் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், பிரதேச சபை தவிசாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## உதய கம்மன்பில...

எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று (15) கோட்டை நீதிவான் பசன் அமரசேன முன்னிலையில் விபரங்களைச் சமர்ப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் புலனாய்வு விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே தொடர்பாக இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகக் கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுரேஷ் சலே தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர மற்றும் சுகீஸ்வர பண்டார, அசங்க நவரத்ன, மஹிந்த பத்திரண ஆகியோரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட குறித்த நபர்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்து அழைப்பாணை பிறப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இதன் போது நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தது.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்த நீதிவான், இந்த நீதிமன்றத்தின் ஊடாக அவர்களுக்கு அழைப்பாணை பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை எனவும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் குறித்த விபரங்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேநேரம், இந்தச் சம்பவத்தின் மூன்றாவது சந்தேகநபரான சுரேஷ் சலேயின் தற்போதைய நிலையை நேரில் சென்று கண்காணிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரியது.

அதற்குப் பதிலளித்த நீதிவான், தேசிய மருத்துவமனை அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்திற்குரிய மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவானுக்கு இது குறித்துத் தெளிவுபடுத்தி, எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் சந்தேகநபரை நேரில் சென்று கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தினார். (ந-7)


சாரதி தேவை



(C-5846)

தங்குமிட வசதி உண்டு

தொடர்புகளுக்கு :
பிரபல கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்
இல.55,57, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
077 071 6329

வேலையாட்கள் தேவை

- உதவி ஆசிரியர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- அலுவலகச் செய்தியாளர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- இயந்திர இயக்குநர் - பயிலுநர் (ஆண்கள் இரவுக் கடமை)

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி.
- யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.


பொது முகாமையாளர்
வலம்புரி
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
076 097 3121

சோதிடர் தேவை

சமூக சேவை நோக்குடன்
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவைக்கு
திருமணப் பொருத்தம் பார்ப்பதில்
சிறப்புத் தேர்ச்சியுடைய
சோதிடர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்)
தொடர்புகளுக்கு :
076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை
# முக்கிய அரசியல் புள்ளி விரைவில் கைது



**(கொழும்பு) ..................... உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னைய முக்கிய அரசியல் புள்ளியொருவர் மிக விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.**

அரசாங்கத்தின் உயர்மட்ட முக்கியஸ்தர்கள் வார இறுதியில் இது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சரிவர முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் மேற்குறித்த முக்கிய புள்ளி கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று புலனாய்வாளர்களும் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன் பிரகாரம், ஆரம்ப கட்டமாக இன்னும் ஒரு சில நாட்களில் குறித்த புள்ளியிடம் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் காவல்துறை திணைக்களம் உத்தேசித்துள்ளது.

அதனையடுத்து குறித்த அரசியல் புள்ளி வழங்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சா/த பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும்

### உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறு முடிவுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளின் தகவல்களை புதுப்பித்து இறுதி செய்யும் பணி தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

ஜூன் 15 ஆம் திகதி எதிர்பார்க்கப்பட்ட பரீட்சை முடிவுகள் வெளியீடு தாமதமாகலாம் என்று செய்திகள் வெளியான நிலையில் இந்த உத்தியோகபூர்வ அறிக்கை வெளியாகியுள்ளன.

பரீட்சை முடிவுகளை தயாரிக்கும் பணி இன்னும் நடைபெற்று வருவதாகவும், இப்பணி தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் 4,50,000 பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாகவும், அவர்களின் தரவுகளை கணனிமயமாக்கும் பணி இன்னும் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, அடுத்த வாரங்களில் முடிவுகள் தயாராகிவிடும் என்று திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(நி)

## அரசாங்கத்தை கவிழ்க்க நினைத்தால் ஒரு போதும் அங்கீகரிக்க மாட்டேன்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

ஊழல் அரசியல்வாதிகளுக்கு அதிகபட்ச தண்டனையை நடைமுறைப்படுத்தும் தற்போதைய அரசாங்கத்திற்குத் தனது ஆசீர்வாதங்களை வழங்குவதாகப் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க ஏதேனும் ஒரு குழுவோ அல்லது அமைப்போ முயற்சித்தால் அதனை ஒருபோதும் அங்கீகரிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நாட்டிற்குத் தேவைப்படுவது நாட்டை நேசிக்கும் ஓர் எதிர்க்கட்சியே தவிர தற்போதுள்ள எதிர்க்கட்சி ஒரு கேலிச்சித்திர எதிர்க்கட்சி எனச் சரத்பொன்சேகா விமர்சித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஐந்து வருட காலத்திற்கு ஆணை வழங்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர்,

அதன் பின்னர் இவர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது வேறு ஒரு குழுவை ஆட்சிக்குக் கொண்டு வருவதா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் ஒரு சிறந்த வேலைத் திட்டங்களாகவே தென்படுகின்றன என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஊழலை ஒழிப்பதாக கூறி வந்த அரசு இன்னும் அதனைச் செய்யவில்லை

### தயாசிறி ஜயசேகர விசனம்



(கொழும்பு)

"ஊழலை ஒழிப்பதாகக் கூறி அதிகாரத்திற்கு வந்த இந்த அரசாங்கம், அதனை இன்னும் நிறைவு செய்யவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கண்டியில் இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கூட்டு எதிரணிகளின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்கலன் மோசடி மற்றும் நிலக்கரி மோசடி போன்றவற்றின் நட்டத்தை இன்று மக்கள் தலை மேல் சுமக்கின்றனர்.

எண்ணெய் கொள்வனவின் போது பாரியளவிலான டொலர் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. ஐ.எம்.எஃப் உடன்படிக்கை முடிவடையும் போது, எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

இன்று எமது தரவுத் தொகுதி இந்தியாவிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாட்டின் கலாசாரம் மற்றும் வரலாறு என்பன மிக நுட்பமாக அழிக்கப்பட்டுவருகிறது. போராட்டத்தின் மூலம் அதிகாரத்திற்கு வந்த இந்த அரசாங்கம், இப்போது ஒட்டுமொத்த நாட்டையும் அழித்துக் கொண்டிருக்கிறது என அவர் தெரிவித்தார். (நி)

## அமெரிக்கா - ஈரான் உடன்படிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் வரவேற்பு



(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உத்தியோகபூர்வ உடன்படிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வரவேற்றுள்ளார்.

பேச்சுவார்த்தை என்பது மனிதகுலத்தின் மிகப்பெரிய பலம் என்பதை இந்த உடன்படிக்கை மீண்டும் நினைவூட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ 'X' தளத்தில் விடுத்துள்ள பதிவில்,

"பிளவுகளினால் ஏற்படும் இழப்புகளையும், நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் இலங்கை நன்கு அறியும். அமைதி என்பது வெறும் யுத்தம் இல்லாத நிலை மாத்திரமல்ல, அது நம்பிக்கை, கண்ணியம், வாய்ப்புகள் மற்றும் நமது பிள்ளைகள் ஒரு சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் பிரசன்னமாகும்.

ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் முற்றுகையை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு இணக்கப்பாடுகளை உள்ளடக்கிய உடன்படிக்கையொன்றை வோஷிங்டன் மற்றும் டெஹ்ரான் எட்டியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் இந்த வரவேற்பை பதிவு செய்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## மாகாணமட்ட கபடிப் போட்டி

# கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு இரட்டை சம்பியன்கள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துச் சாதனை படைத்துள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பாலிநகர் மகா வித்தியாலய அணி மோதியது.

பரபரப்பான ஆட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு கோணாவில் மகா வித்தியாலய அணியினர் பெற்றனர்.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி மோதியது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 34:29 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது. (3-90)







## தலைவர் கிண்ண உதைபந்தாட்டம்

### அரையிறுதிக்கு முன்னேறிய கொலின்ஸ்!



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் லீக் ஆட்டங்களில் ஹட்ரிக் வெற்றியுடன் அரையிறுதி போட்டிக்கு கொலின்ஸ் அணி முன்னேறியது.

வடமராட்சி சிரேஷ்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அமரர் க.சொக்கன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி - 2026 கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் ஐந்தாம் நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொலின்ஸ் எதிர் ஐக்கிய விளையாட்டு கழக அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டன. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் அடித்திருந்தன. இரண்டாவது பாதியில் கொலின்ஸ் அணி மேலும் ஒரு கோல் அடித்து முன்னிலை பெற்றது. ஐக்கிய விளையாட்டுக் கழகம் பதில் கோல் அடிக்க தீவிரம் காட்டிய போதிலும் முயற்சி பலனளிக்கவில்லை. ஆட்ட நேர முடிவில் 2 : 1 என்ற கணக்கில் கொலின்ஸ் அணி வெற்றி கொண்டது.


கொலின்ஸ் விளையாடிய மூன்று போட்டிகளிலும் தொடர்ச்சியாக வென்று அரையிறுதிக்கு முதல் அணியாக முன்னேறியது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் வல்வை எதிர் அண்ணா சிலையடி மற்றும் நவசக்தி எதிர் றேஞ்சர்ஸ் அணிகளும் பலப்பரீட்சை நடத்த உள்ளன. (3-60)

## மாகாணமட்ட குத்துச்சண்டை

# சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு 3 தங்கம் 1 வெள்ளிப்பதக்கம்


எஸ்.பிரணாத்


ரி.ஜபீஷ்


வி.விதுஷன்


ரி.சுலக்ஷன்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே கடந்த சனிக்கிழமை வடமராட்சி சென்.தோமஸ் மகளிர் பாடசாலையில் நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்டோருக்கான குத்துச் சண்டை போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியினர் 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

75-81 கிலோகிராம் நிறைப் பிரிவில் எஸ்.பிரணாத் முதலாம் இடத்தையும், 64-69 கிலோகிராம் நிறைப் பிரிவில் ரி.ஜபீஷ் முதலாம் இடத்தையும், 52-56 கிலோகிராம் நிறைப் பிரிவில் வி.விதுஷன் முதலாம் இடத்தையும், 46-49கிலோகிராம் நிறைப் பிரிவில் ரி.சுலக்ஷன் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் இடைவிலகல் அதிகரிப்பிற்கு கல்வி அமைச்சே பொறுப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கு கல்வி அமைச்சே பெரும் பொறுப்பேற்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தேவைகள் மற்றும் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் மூலம் வசூலிக்கப்படும் பணம் பெற்றோருக்கு பெரும் சுமையாக மாறியுள்ளதாகவும் இது மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவது குறைவதற்குக் காரணியாக அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, பல பெற்றோரால் பாடசாலைகள் கோரும் செலவுகளைத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

அதேநேரம் தனியார் மேலதிக வகுப்புக்களின் விரைவான பரவல் மாணவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மேலும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தவறிவிட்டது. மாணவர்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்பதை கண்டறிந்து, அந்த பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண பாடசாலைகளும் கல்வி அமைச்சும் இணைந்து செயற்பட வேண்டும்.

கல்வி நிர்வாகத்தில் எடுக்கப்படும் தன்னிச்சையான முடிவுகளும் தோல்விகளுமே நாட்டின் கல்வி முறை வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# வடக்கின் கரம் போட்டி

## வேலணை மத்திய கல்லூரி மாணவி விதுர்ஷினி சம்பியன்



வடமாகாண மட்ட திறந்த கரம் போட்டியில் யாழ் மாவட்ட அணி சார்பில் ஒற்றையர் ஆட்டத்திலும் குழு போட்டியிலும் கலந்து கொண்ட ஜெ.விதுர்ஷினி இவ் வருடத்திற்கான வட மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதே போன்று குழு போட்டியிலும் கலந்துகொண்டு வடமாகாண அணிக்கு தனது திறமையை வெளிப்படுத்தி அணி சம்பியனாவதற்கும் பங்காற்றியுள்ளார்.

முன்பதாக கடந்த 18.04.2026 நடைபெற்ற மாவட்ட மட்ட கரம் போட்டியில் வேலணை பிரதேச செயலகம் சார்பில் கலந்து கொண்டு மாவட்டமட்ட போட்டியில் வெற்றி பெற்று யாழ் மாவட்ட அணியில் இடம் பிடித்திருந்த ஜெ.விதுர்ஷினி, கடந்த சனிக்கிழமை யாழ் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற மாகாணமட்ட போட்டியிலும் வெற்றி பெற்றிருந்த நிலையில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட போட்டியில் வடமாகாணம் சார்பாக கலந்து கொள்ளவுள்ளார். (3-33)

# மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கோரி

## சுவரொட்டி காட்சிப்படுத்தும் புதிய வேலைத்திட்டம்




(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி, "கஃபே" அமைப்பினால் நாடு தழுவிய ரீதியில் பாரிய கையெழுத்துச் சேகரிக்கும் விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்போராட்டத்தை மக்கள் மத்தியில் மேலும் பலப்படுத்தும் நோக்கில், "கஃபே" அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களினால் நாடு முழுவதும் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தும் புதிய வேலைத்திட்டம் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, கண்டி மாவட்டத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் பொது இடங்களை மையப்படுத்தி இந்தச் சுவரொட்டிப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 150 | 160 | 280 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | -- | 220 | 200 | 330 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 550 | 600 | 500 | 600 |
| தக்காளி | 800 | 750 | 700 | 800 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 | 200 | 120 |
| கோவா | 250 | 280 | 260 | 250 | 250 | 200 |
| கரட் | 350 | 450 | 450 | 450 | 450 | 380 |
| பூசணி | 120 | 120 | 100 | 160 | 100 | 80 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 450 | 450 | 200 | 340 |
| பெரிய வெங்காயம் | 250 | 230 | -- | 200 | -- | 180 |
| பாகற்காய் | 1400 | 2000 | 2000 | 1600 | 800 | 700 |
| வெண்டக்காய் | 200 | 180 | 130 | 300 | 200 | 850 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 400 | 400 | -- | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 | 450 | 250 |
| லீக்ஸ் | 400 | 420 | 400 | 400 | 400 | 370 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 600 | 600 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 350 | 500 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 1500 | 1300 | 1000 | 1200 | 1000 | 900 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 500 | 600 | 550 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | -- | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 80 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 500 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 120 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 420 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 300 | 180 | 250 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | -- | 60 | -- | 40 |
| வல்லாரை | 100 | 70 | -- | 80 | -- | 60 |
| ஈரப்பலா | -- | -- | -- | 250 | -- | -- |

# மாகாணமட்ட கபடிப்போட்டி

## தும்பளை சிவப்பிரகாச ம.வி.சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 17 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியை எதிர்த்து முல்லைத்தீவு எக்கடாஸ்வெவ மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி தமது திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)

# தங்கவிலை அதிகரிப்பு

(கொழும்பு)


இலங்கையில் கடந்த சனிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்று தங்கவிலை பாரிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றைய தினம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் ஒன்று 6,000 ரூபாயால் அதிகரித்து 392,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்று 4,000 ரூபாயால் அதிகரித்து 360,600 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது.


இதன்படி, 24 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 49,000 ரூபாயாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 45,075 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


# சர்வதேச இளைஞர் முகாமில் பங்கேற்க சென்.பற்றிக்ஸ் மாணவன் ஜேர்மனி பயணம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை - ஜேர்மனி நட்புறவு திட்ட அடிப்படையில் ஜேர்மனி சென் பீட்டர்ஸ் திடலில் நடைபெறும் "பாடசாலைகள் எதிர்காலத்திற்கான பங்காளிகள்" (JUKU PASCH) முயற்சியின் கீழ் கோதே ( GOETHE) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 900 சர்வதேச மாணவர்கள் பங்குபெறும் சர்வதேச இளைஞர் முகாமில் பங்குபற்றுவதற்காக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 மாணவர்களில் ஒருவராக யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் துகிஷ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இம் மாதம் 7 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை ஜேர்மனியில் நடைபெறவுள்ள இம் முகாமில் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள், பயிலரங்குகள், விளையாட்டுகள், திரைப்படங்கள், பாரம்பரிய உலகளாவிய உணவுகளை சமைத்தல், மற்றும் தத்தமது கலாசார பாரம்பரியங்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (3)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். ஆயர் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.



சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் விடுதி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 20 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (8-33)

# நெடுந்தீவுக்கான சேவையில் மீண்டும் வடதாரகை படகு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை படகு, திருத்த வேலைகள் நிறைவடைந்த நிலையில் , நேற்று திங்கட்கிழமை முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை, நெடுந்தாரகை மற்றும் குமுதினி ஆகிய மூன்று படகுகளும் பழுதடைந்தமையால் நெடுந்தீவுக்கான பயணத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

இந்நிலையில் , குறித்த படகுகளை துரிதமாக திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதில் வடதாரகையின் திருத்த பணிகள் நிறைவடைந்த நிலையில், நேற்று முதல் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் நெடுந்தாரகை மற்றும் குமுதினி படகுகளின் திருத்தப்பணிகள் நிறை வடைந்தவுடன், மக்களின் பயன்பாட்டிற்காக மீண்டும் சேவையில் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-33)



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பக் கல்வி 'B' பிரிவு மாணவ ஆசிரியர்களின் ஆக்கங்களை தாங்கிய "செயலாற்றுகை தரங்கணிப்பீடு" நூல் வெளியீட்டு விழா கடந்த 12 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை பொறுப்பு விரிவுரையாளர் கே.சசிக்காந், பீடாதிபதி ரி. கணேசரத்தினத்துக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லுக்கான நிர்ணய விலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் இன்று கவனயீர்ப்பு!

(தருமபுரம்)

நெல்லுக்கான உரிய நிர்ணய விலையை வலியுறுத்தி இன்றைய தினம் இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இன்னும் 15 நாட்களில் நெல் அறுவடை செய்யப்படவுள்ள நிலையில் உற்பத்தி செலவுக்கு ஏற்ப நெல்லுக்கான நிர்ணய விலை கிடைக்கவில்லை இந் நிலையில் அரசாங்கம் உரிய விலையை வழங்க வலியுறுத்தி இன்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலய முன்றலிருந்து மாவட்ட செயலகம் வரை கவனயீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்வுள்ளது. குறித்த போராட்டத்தில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. (8-316)

# சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம்

## சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களுடைய நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் கரைதுறைப்பற்று ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிறுபோக நெற்செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் விவசாயிகளிடமிருந்து இதுவரை நெல்லைக் கொள்வனவு செய்யாத நிலையில் விவசாயிகள் தங்களுடைய நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் தனியார் குறைந்த விலைகளில் நெல்லை விற்பனை செய்வதால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே அரசாங்கத்தினால் நெல்லுக்கான உத்தரவாத விலை அறிவிக்கப்பட்டு அது தற்போதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் நெல்லின் கொள்வனவு விலை 8200 ரூபாவாக ... வியாபாரிகள் தற்போது 5300 ரூபா முதல் 5500 ரூபா விலைகளில் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.

நெல்லுக்கான உற்பத்திச் செலவு பன்மடங்காக அதிகரித்துள்ள நிலையில் சிறுபோக அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களுடைய நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் பெரும் இடர்பாடுகளை எதிர் நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மர்மக்கரங்கள் அம்பலமாக வேண்டும்

## மனோ கணேசன் இடித்துரைப்பு



(கொழும்பு)

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே மீது தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய விசாரணைகள் மிகவும் சரியானது என்றும், அது தங்கு தடையின்றி தொடர வேண்டும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உண்மையான குற்றவாளிகளையும் அதன் பின்னணியையும் வெளிக்கொண்டு வரும் தற்போதைய அரசின் இந்த நேர்மையான முன்னெடுப்புகளுக்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அப்பழுக்கற்ற இஸ்லாமிய மார்க்கத்துக்கு முரணான இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டில் இருந்தது என்பது உண்மைதான். இல்லாவிட்டால், வெளியில் இருந்து எவர் தூண்டிவிட்டாலும் கூட, தற்கொலை குண்டுதாரியாக மாறும் அளவுக்கு யாரும் துணியமாட்டார்கள்.

ஆனால், இந்த ஒரு சில தீவிர அடிப்படைவாதிகள் ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம் மக்களையும் எவ்விதத்திலும் பிரதி நிதித்துவம் செய்யவில்லை.

உண்மையில், இந்த தீவிரவாதக் குழுக்கள் குறித்துப் பல முஸ்லிம் சமூக, மதப் பிரமுகர்கள் உரிய காலப்பகுதியில், மிகுந்த பொறுப்புணர்வுடன் பொலிஸாருக்கு எழுத்து மூலமாகத் தெளிவான தகவல்களை வழங்கியிருந்தனர். நபர், இடம் உள்ளிட்ட துல்லியமான விவரங்கள் பொலிஸாரிடம் இருந்தன.

எனவே, இந்தத் தற்கொலைத் தாக்குதல்களைத் திட்டமிட்ட வெறியர்களை முன்கூட்டியே கைது செய்து விசாரிக்கக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் போதிய அவகாசமும், ஆதாரங்களும் இருந்தன. அவர்களைக் கைது செய்து, தீவிரவாத ஒழிப்புப் புனர்வாழ்வு வழங்கிப் பாரிய விபரீதத்தைத் தடுத்திருக்கவும் வாய்ப்புகள் இருந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக, அண்டை நாடான இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு புலனாய்வு ஏஜென்சிகளும் காத்திரமான எச்சரிக்கைத் தகவல்களை உரிய நேரத்தில் வழங்கியிருந்தன.

இருப்பினும், உரிய கைதுகளையோ, விசாரணைகளையோ அல்லது தடுப்பு நடவடிக்கைகளையோ முன்னெடுக்க எமது பொலிஸ் மற்றும் புலனாய்வுத் துறைகள் திட்டமிட்டுத் தவறிவிட்டன.

கடந்த காலங்களில் சுரேஷ் சலே, பல இலங்கையர்களைக் கைது செய்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்து விசாரித்துள்ளார்.

ஆகவே, சட்டபூர்வ விசாரணை என்பது அவருக்கு ஒன்றும் புதிய விடயமல்ல.

கடந்த போர்க் காலத்தில் அவர் ஒரு தேசப்பற்றாளராகப் பணியாற்றினார் என்று கூறப்படும் கதைகள், இன்று அவரைப் பாரபட்சமின்றி விசாரிப்பதைத் தடுப்பதற்கான காரணங்களாக அமைய முடியாது. உண்மையில், சுரேஷ் சலேயிடம் இருந்தது "தேசப்பற்றா" அல்லது ஆட்சியாளர்களைக் காப்பாற்றும் "வேறெந்த பற்றா" என்பது இந்த விசாரணைகளின் மூலம் வெளிவர வேண்டும்.

அதேவேளை, இன்றைய புதிய விசாரணைகளுக்குத் தலைமை தாங்கும் உயர் அதிகாரிகளான ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன ஆகியோர் புதிதாக வந்தவர்கள் அல்லர். இந்த விபரீதங்கள் நிகழ்ந்த காலகட்டத்திலும் அவர்களே பொறுப்பான பதவிகளில் இருந்தனர்.

ஆகவே, அன்று அவர்களைச் சுதந்திரமாகப் பணியாற்றவிடாமல் தடுத்த அந்த "மர்மக் கரம்" எது என்பதும், இவற்றுக்குப் பின்னால் உள்ள மாபெரும் சூத்திரதாரி யார் என்பதும் சட்டத்தின் முன் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும்." என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான புதிய செயலி அறிமுகம் - வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கான புதிய தளமான 'LankaKonect' என்ற கைபேசி செயலி இன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அணுகக்கூடிய, பதிலளிக்கக்கூடிய மற்றும் மக்களுக்கு உகந்த தூதரக சேவைகளை நோக்கிய ஒரு படியாக இந்த புதிய முயற்சி அமையும் என வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர விவரித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமிருந்து பெறப்படும் முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகளை கையாள்வதை முறைப்படுத்துவதற்கும், தூதரக சேவைகளில் விரைவான பதிலளிப்பு மற்றும் மேம்பட்ட வெளிப்படைத்தன்மையை வழங்குவதற்கும் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# ஆடைத் துறை ஏற்றுமதி வருவாயில் சரிவு

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களில் ஒன்றான ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் ஏற்றுமதி வருவாய், 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சரிவடைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 1,751.8 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி வருவாய் 1,624.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இது 7.3 சதவிகிதக் குறைவைக் குறிக்கிறது என்ற இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்ட அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 4,315.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய், 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4,534.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக சிறிதளவு அதிகரித்துள்ளது.

இருப்பினும், இதே காலகட்டத்தில் இறக்குமதிச் செலவினம் கணிசமாக அதிகரித்து, 2025 இல் 6,572.9 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2026 இல் 8,227.9 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

நுகர்வோர் பொருட்கள் இறக்குமதியில் 32.8 சதவிகித உயர்வு, இடைநிலை பொருட்கள் இறக்குமதியில் 24.1 சதவிகித உயர்வு மற்றும் முதலீட்டு பொருட்கள் இறக்குமதியில் 19.8 சதவிகித உயர்வு ஆகியவற்றின் காரணமாக, இது 25.2 சதவிகித அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

இதன் விளைவாக, ஏற்றுமதி வருவாயுடன் ஒப்பிடும்போது இறக்குமதி செலவினங்களின் வேகமான வளர்ச்சியின் காரணமாக, 2026 ஜனவரி-ஏப்ரல் காலகட்டத்தில் வர்த்தகப் பற்றாக்குறை 3,693 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது. (நி)


## வளர்ப்பு நாயைக் காணவில்லை



வெள்ளை. பிறவுண் நிற வளர்ப்பு நாயை ஆறுகால்மடம் காரைநகர் வீதியில் காணவில்லை. நாயை இழந்து உரிமையாளர்களாகிய நாம் மிகுந்த மன வேதனையில் இருக்கிறோம். தயவு செய்து நாயைக் கண்டால் எமக்குத் தகவல் சொல்லவும்.நன்றி.

அ.விவேகானந்தன்
12/24 பொன்னையா லேன், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

(C-5844)

தொடர்: 074 342 4333


# போலித் தாள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

வெல்லம்பிட்டி பகுதியில், 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலன்னாவ பகுதியில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே நேற்று முன்தினம் பிற்பகல் மேற்படி சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் கொலன்னாவ பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் உணவு உட்கொண்டுள்ளதுடன், அதற்கான பணத்தைச் செலுத்துவதற்காக 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்றை வழங்கியுள்ளார்.

இதன்போது, அந்த நாணயத்தாள் மீது உணவக உரிமையாளருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன், உடனடியாக இவ் விடயம் தொடர்பில் உணவக உரிமையாளர், பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரைச் சோதனையிட்ட போது அவரிடமிருந்து மேலும் இரண்டு 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)


## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.05.2026 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர். சின்னத்தம்பி சிவபாதம்

(சிவா கராச் உரிமையாளர் நெல்லியடி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.06.2026 இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து பகல் 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5843)

[illegible]புளியடி, அல்வாய் மேற்கு, அல்வாய்.

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாரதம்

# பிரேசிலில் இரு வானூர்திகள் நடுவானில் மோதி விபத்து

## 6பேர் உடல் கருகி உயிரிழப்பு



(பிரேசிலியா)

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகருக்கு மேலாக நடுவானில் இரண்டு வானூர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், அவற்றில் பயணித்த 6 பேரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் உத்தியோகபூர்வ விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நடுவானில் மோதிக் கொண்ட இரண்டு வானூர்திகள், அங்கிருந்த மின்சார சிற்றூந்து விற்பனை நிலையம் ஒன்றின் வாகன நிறுத்துமிடத்தில் வீழ்ந்து நொறுங்கியுள்ளன.

இதன் காரணமாக அங்கிருந்த சுமார் 20 மின்சார வாகனங்கள் தீப்பற்றி எரியத் தொடங்கியதாக தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மின்சார வாகனங்களில் உள்ள லித்தியம்-அயன் மின்கலங்கள் காரணமாக, ஏற்பட்ட தீயை அணைப்பதில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிட்டதாக தீயணைப்புப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் பேபியோ கொன்ட்ரெய்ராஸ் தெரிவித்துள்ளார்.

தீப்பற்றி எரிந்த மின்சார வாகனங்களுக்கு இடையே விழுந்து நொறுங்கியு ஒரு வானூர்தியில் இருந்து 5 உடலங்களையும், அதிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் விழுந்த மற்றுமொரு வானூர்தியில் இருந்து அதன் விமானியின் உடலத்தையும் மீட்புப் பணியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை வானூர்திகளின் பாகங்கள் விபத்து நடந்த இடத்திலிருந்து பல நூறு மீற்றர் தூரத்திற்கு சிதறிப் போய்க் காணப்பட்டதாக அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. (3)

# லெபனான் மீதான தாக்குதல்களில் பின்வாங்கப்போவதில்லை!

## இஸ்ரேல் அறிவிப்பு



(இஸ்ரேல்)

அமெரிக்க-ஈரான் போர் நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலியப் படைகள் திரும்பப் பெறப்படாது என்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் அறிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடு அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் அழுத்தங்கள் இருந்தபோதிலும், லெபனானில் இருந்து இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளை திரும்பப் பெறுவதை இஸ்ரேல் எதிர்க்கிறது என்று கட்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், லெபனான் அமெரிக்க-ஈரான் ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்பதை அவர் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளதாக சர்வதேச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலின் இந்த நிலைப்பாட்டை ட்ரம்பிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளதாகவும், ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்ஸெத்துடன் தொலைபேசியில் பேசியபோது தாமே அதை மீண்டும் வலியுறுத்தியதாகவும் கட்ஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் மிக உயர்ந்த பாதுகாப்பு நலன்களிலோ அல்லது தங்களது குடிமக்களின் பாதுகாப்பிலோ தாங்கள் சமரசம் செய்துகொள்ளப் போவதில்லை என்றும், பாதுகாப்பு மண்டலங்களிலிருந்து பின்வாங்கப்போவதில்லை என்றும் கட்ஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், லெபனானில் நடக்கும் நிகழ்வுகள் தொடர்பாக ஈரான் இஸ்ரேலைத் தாக்கினால், தங்களது முழு பலத்துடன் தாக்குவோம் என்றும், அதிகாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வை தெளிவாக வெளிப்படுத்துவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

# ஜூன் -19 இல்

# அமெரிக்கா - ஈர

## உலகத் தல



(வோஷிங்டன்)(

அமெரிக்காவும்

நீடித்து வரும் தங்

கொண்டு வருவத

ஒப்புக்கொண்டுள்

செய்தி வெளியிட்டு

லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாகவும் நிரந்தரமாகவும் முடிவுக்குக் கொண்டுவருவதாக இரு தரப்பினரும் அறிவித்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

"அதிகாரப்பூர்வ ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வு ஜூன் 19 வெள்ளிக்கிழமை அன்று சுவிற்சர்லாந்தில் நடைபெறும் என ஷெரீஃப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான சமாதான உடன்படிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுவிற்சர்லாந்தில் கையெழுத்திடப்படும் என சட்ட மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான ஈரானிய துணை வெளியுறவு அமைச்சர் காசெம் கரீபாபாடி தெரிவித்துள்ளார்.

இது தமது இராணுவத்திற்கு கிடைத்த வெற்றி எனவும் ஈரானிய துணை வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைத்த டொனால்ட் ட்ரம்ப், இந்த மாபெரும்

# அணு ஆயுத நாடு என்ற அ

# ஒருபோதும் மாற்ற மு

## அமெரிக்காவிற்கு வடகொரிய

(பியோங்யாங்)

அணு ஆயுத நாடு என்ற வடகொரியாவின் அந்தஸ்தை ஒருபோதும் மாற்ற முடியாது என்று அமெரிக்காவுக்கு வட கொரியா பதிலடி கொடுத்துள்ளது.

ஈரானைத் தொடர்ந்து வட கொரியா பக்கம் அமெரிக்கா தனது பார்வையை திருப்பியுள்ளது. அணு ஆயுதத்தை குறைக்குமாறு தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகள், வடகொரியாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ல் கையெழுத்தாகும்
# ரான் அமைதி ஒப்பந்தம்!
## தலைவர்கள் வரவேற்பு

ன்)( ..............................

**யும் ஈரானும் நான்கு மாதங்களாக தங்களது போரை முடிவுக்குக் வதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கு டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் பிட்டுள்ளன.**



ஒப்பந்தம் ஒட்டுமொத்த பிராந்தியத்திற்கும் அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் என அறிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் மற்றும் மத்தியஸ்த நரடான பாகிஸ்தானும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஈரான் ஹார்முஸ் நீரிணையை மூடியதும், அமெரிக்கா ஈரானிய துறைமுகங்களை முற்றுகையிட்டதும் நீக்கப்படும் என்று கூறுகின்றனர்.

அத்துடன் இந்த அமைதி ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

பிரித்தானிய பிரதமர் கீர்ஸ்டார் மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், ஜேர்மனி ஜனாதிபதி ஃபிரெட்ரிக் மெர்ஸ் மற்றும் ஜப்பான் பிரதமர் சனாயே தாகாச்சி உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள், ஹார்முஸ் நீரிணையில் எவ்வித தடையுமற்ற மற்றும் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்தை மீண்டும் உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுக்க சர்வதேச அணுசக்தி முகமையுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும், இந்த ஒப்பந்தம் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அமைதிக்கும் வழிவகுக்கும் என்றும் உலகத் தலைவர்கள் தங்களின் கூட்டு மற்றும் தனிப்பட்ட அறிக்கைகளில் தெரிவித்துள்ளனர். (3)

# உக்ரைனின் வரலாற்றுச் சிறப்புமிக்க மடாலயம் மீது ரஷ்யா தாக்குதல்



(மொஸ்கோ)

கடந்த இரண்டு வாரங்களில் உக்ரைனியத் தலைநகர் மீது ரஷ்யா நடத்திய மிகக் கடுமையான வான் வழித் தாக்குதலில், உக்ரைனிய ஆன்மிக மற்றும் கலாசார வரலாற்றின் சின்னமான கீவ் பெச்செர்ஸ்க் லாவ்ரா மடாலயம் தீப்பிடித்ததில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் திங்களன்று தெரிவித்தனர்.

இந்த வாரம் பிரான்ஸில் நடைபெறவிருக்கும் ஜி7 மாநாட்டிற்கு முன்னதாக, நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முயற்சிகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் பேசியதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த புதிய தாக்குதல்கள் நடந்துள்ளன.

1051இல் நிறுவப்பட்டு, யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக விளங்கும், மத்திய கீவ்வில் உள்ள பெச்செர்ஸ்க் லாவ்ரா மடாலயம், ஒரு நேரடித் தாக்குதலில் பலத்த சேதமடைந்தது என்று தலைநகரின் இராணுவ நிர்வாகத் தலைவர் டைமூர் தகாச்சென்கோ ஒரு டெலிகிராம் பதிவில் தெரிவித்தார்.

மடாலயத்தின் மீது வானுயர்ந்த தீப்பிழம்புகள் எழுந்தபோது, குடியிருப்பாளர்கள் நிலத்தடியில் தஞ்சம் புகுந்தனர்.

இது, ஜூன் மாதத் தொடக்கத்தில் ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளால் 20இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு, 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததற்குப் பிறகு உக்ரேன் மீது ரஷ்யா நடத்திய மிக மோசமான தாக்குதலாகும். (3)

# ) அந்தஸ்தை
# ) முடியாது
## ரியா பதிலடி

அழுத்தம் கொடுத்து வருகின்றன. இது தொடர்பாக வடகொரியாவுடன் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற இருதரப்பு அணுசக்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், தென் கொரியாவும், அமெரிக்காவும் மீண்டும் வலியுறுத்தின. இந்த விவகாரத்தில் வடகொரியாவின் நிலைப்பாடு குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையை, வடகொரியாவின் மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதில், கூறியிருப்பதாவது, போரில் ஈடுபட்டுள்ள மற்றொரு தரப்பின் அணு ஆயுதங்களை குறைப்பது பற்றிப் பேசுவது ஒரு நியாயமற்ற பேச்சாகும். வெளிப்புற அழுத்தங்களால் அணு ஆயுத நாடு என்ற வடகொரியாவின் அந்தஸ்தை ஒருபோதும் மாற்ற முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பேரழிவு
## கடல் உயிரினங்கள் அழிந்து போகும் அபாயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தெற்கு மிண்டானாவோ தீவில் இந்த வாரத் தொடக்கத்தில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்தினால், கடலின் அடிப்பகுதி சுமார் 2 மீற்றர் வரை மேலே உயர்ந்துள்ளதாக அந்நாட்டு சுற்றாடல் துறை தெரிவித்துள்ளது.

இந்த விசித்திரமான புவியியல் மாற்றத்தினால் பவளப் பாறைகள் மற்றும் கடல் தாவரங்கள் வான் வெளிக்கு வெளிப்பட்டு, பெருமளவிலான கடல் உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி மிண்டானாவோ தீவில் ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான இந்த



கொடூர நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 61 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 40இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ முகவரகம் புதுப்பிக்கப்பட்ட தரவுகளை வெளியிட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டு இரண்டு நாட்களின் பின்னரே, கடலோரப் பகுதிகள் திடீரென மேலெழும்பி நிலமாக மாறியுள்ள புவியியல் விந்தையை உள்ளூர் மக்கள் அவதானித்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

வரைபடமாக்கப்பட்ட ஆய்வுகளின்படி, இப்பகுதிகள் சுமார் 2 மீற்றர் வரை உயர்ந்து, அதுவரை நீருக்கடியில் மூழ்கியிருந்த கடலின் அடிப்பகுதியை வெளியே காட்டியுள்ளது." சுற்றாடல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள புகைப் படங்களில், கடலுக்குள் இருக்க வேண்டிய பிரம்மாண்ட பவளப்பாறைகள் மற்றும் கடல்புல் படுக்கைகள் முற்றிலும் வறண்டு போய், தரை மட்டத்தில் காட்சியளிக்கின்றன.

பவளப்பாறைகள் காற்றில் வெளிப்பட்டதால், அவற்றுடன் இணைந்து வாழும் சிறிய பாறை மீன்கள், கடல் விலாங்கு மீன்கள், சிப்பிகள் மற்றும் நத்தைகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான கடல் உயிரினங்கள் மடிந்து வருகின்றன.

அழுகிப்போன கடல் உயிரினங்களில் இருந்து வெளியாகும் நச்சு வாயுக்கள் மற்றும் துர்நாற்றம் காரணமாக, தங்களுக்கு ஏதேனும் உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுமோ என்ற அச்சத்தில் உள்ளூர் மக்கள் வாழ்கின்றனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 33)

## சிக்கனமான வீடும் சிக்கல் இல்லாத வாழ்வும்!




சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்நாள் கனவு. "பறவைகள் கூட தனக்கென ஒரு கூடு கட்டுகின்றன, நமக்கு ஒரு வீடு வேண்டாமா?" என்ற எண்ணம் உழைக்கும் வர்க்கத்தின் அடிமனதில் ஆழப் பதிந்தது. ஆனால், இன்றைய பொருளாதாரச் சூழலில் அந்தக் கனவு நிஜமாகிறதா என்றால், பலருக்கு அது ஒரு எட்டாக்கனியாகவே நீடிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் வீடு கட்டுவதில் உள்ள யதார்த்தமான சவால்களையும், திட்டமிடலின் முக்கியத்துவத்தையும், ஒரு வீட்டை எப்படி 'சுமையற்ற சுகமான இல்லமாக' மாற்றுவது என்பதையும் விரிவாகப் பார்ப்போம்.

**1.கசக்கும் யதார்த்தம்: கனவாகவே மாறும் சொந்த வீடு!**

இன்றைய சந்தையில் சிமெந்து, கம்பி, செங்கல், மணல் என அனைத்துக் கட்டுமான மூலப் பொருட்களின் விலையும் நாளுக்கு நாள் ஜெட் வேகத்தில் உயர்ந்து கொண்டே போகிறது. காலையில் கேட்கும் விலை மாலையில் இருப்பதில்லை. இதனால், நடுத்தர வர்க்கத்தினர் வீடு கட்டுவது என்பது வெறும் பகற்கனவாகவே மாறிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

அப்படியே துணிந்து இறங்கி, சேமித்த பணத்தை வைத்து வேலையைத் தொடங்கினாலும், திட்டமிட்ட பட்ஜெட்டைத் தாண்டி செலவுகள் எகிறுகின்றன. பல நேரங்களில், ஆரம்பிக்கும் போது இருந்த உற்சாகம் பாதியிலேயே காணாமல் போய்விடுகிறது. இறுதியில், வீட்டை முடிப்பதற்காக கையில் உள்ள நகைகளை அடகு வைப்பதிலும், வட்டிக்குக் கடன் வாங்குவதிலும் போய் முடிகிறது.

யதார்த்த நிலை: ஆசை ஆசையாய் கட்டத் தொடங்கும் வீடு, முறையான திட்டமிடல் இல்லாவிடில், இறுதியில் நம்மை நிம்மதியற்ற கடனுக்குள்ளும், வாழ்நாள் கஷ்டத்திற்குள்ளும், தீராத மன உளைச்சல் மற்றும் சிக்கல்களுக்குள்ளும் தள்ளி விடுகிறது.

**2.சிக்கனமான வீடு: திட்டமிடலின் மாபெரும் வெற்றி**

சிக்கனமான வீடு என்பது தரமற்ற பொருட்களால் கட்டப்படும் வீடு அல்ல அது தேவையில்லாத ஆடம்பரங்களைத் தவிர்த்து, அறிவார்ந்த முறையில் கட்டப்படும் 'அளவான வீடு'.

- ஆரம்பகாலத் திட்டமிடலும் மதிப்பிடுதலும் (Planning & Estimation): வீடு கட்டத் தொடங்குவதற்கு முன்பே, நமது கையில் இருக்கும் தொகை எவ்வளவு, வரப்போகும் செலவு எவ்வளவு என்பதை முன்கூட்டியே துல்லியமாகக் கணிக்க வேண்டும்.
- தேவைக்கு ஏற்ற வீடு: உங்களுக்குத் தேவை இரண்டு படுக்கையறைகள் (Bed rooms) என்றால், அதை மட்டுமே கட்டுங்கள். எதிர்காலத்தில் தேவைப்படலாம் என்ற கற்பனையில், இப்போதே பெரியதாகக் கட்டி பணத்தை முடக்கக் கூடாது.
- மாற்று மூலப்பொருட்களைப் பயன்படுத்தல்: தரத்தில் சமரசம் செய்யாமல், விலை குறைந்த மற்றும் சூழலுக்கு உகந்த மாற்று மூலப்பொருட்களை (Alternative materials) நாடலாம்.
- ஆடம்பரங்களைத் தவிர்த்தல்: உட்புற வடிவமைப்பு (Interior design), பகட்டான மின்விளக்குகள் மற்றும் விலையுயர்ந்த டைல்ஸ் போன்ற பகட்டுகளைத் தவிர்த்து, எளிமையான நேர்த்தியைக் கடைப்பிடிப்பதே சிக்கனத்தின் முதல் படி.

**3.சிக்கலான வீடு: அடுத்தவர் பார்வைக்காக அழியும் நிம்மதி**

பல வீடுகள் 'சிக்கலாக' மாறுவதற்குக் காரணம், அது வாழ்பவர்களின் தேவைக்காகக் கட்டப்படாமல், 'அடுத்தவர்கள் பார்க்க வேண்டும்' என்பதற்காகக் கட்டப்படுவதே ஆகும்.

பக்கத்து வீட்டுக்காரரர் அல்லது உறவினர் ஒருவர் மூன்று மாடியில் பிரம்மாண்டமாகக் கட்டிவிட்டார் என்பதற்காக, நாமும் நமது வருமானத்திற்கு மீறி ஆசைப்படுவதுதான் வீழ்ச்சியின் தொடக்கம். தகுதியை மீறி வங்கிக் கடன்களையும், தனிநபர் கடன்களையும் வாங்கும் போது, மாதாமாதம் கட்ட வேண்டிய வட்டி, வீட்டின் அஸ்திவாரத்தையே உலுக்கி விடுகிறது.

தேவைக்கு மேலதிகமாகப் பெரிய வரவேற்பறை, பயன்படாத பால்கனிகள், ஆடம்பரமான டைல்ஸ் மற்றும் பளிங்குக் கற்கள் எனச் செலவு செய்யும் போது, ஆரம்பத்தில் அது பெருமையாகத் தோன்றலாம். ஆனால், காலப்போக்கில் கடனை அடைக்க ஓடி ஓடி உழைக்கும் போதுதான், அந்த ஆடம்பரம் எவ்வளவு பெரிய தவறு என்பது புரியும்.

**4. தகுந்தவர்களைத் தெரிவு செய்தல்: வெற்றியின் ரகசியம்**

வள்ளுவன் வகுத்த உன்னத நெறி ஒன்று உண்டு:

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்."**

ஒரு செயலை எந்தக் கருவியால், எவனால் செய்து முடிக்க முடியும் என்பதை ஆராய்ந்து, அதை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். வீடு கட்டுவதற்கும் இந்த விதி நூறு சதவீதம் பொருந்தும். நாமே எல்லாவற்றையும் செய்வோம் என்று இறங்குவது அல்லது தகுதியில்லாதவர்களிடம் வேலையைக் கொடுப்பது பண விரயத்திற்கே வழிவகுக்கும்.

அ.தகுந்த பொறியியலாளர் (Chartered Engineer / Architect)

ஒரு தகுதியான பொறியியலாளர் உங்கள் பட்ஜெட்டிற்குள் வீட்டைச் சிறப்பாக வடிவமைத்துக் கொடுப்பார். மண் பரிசோதனை முதல், கட்டடத்தின் உறுதித் தன்மை, முறையான மதிப்பீடு (Estimation) மற்றும் வரைபடங்களை (Plan) அவரே துல்லியமாகத் தயாரிப்பார். ஆரம்பத்தில் அவருக்குக் கொடுக்கும் கட்டணம், பின்னாளில் ஏற்படும் மாபெரும் கட்டுமான விரயங்களைத் தடுக்கும் முதலீடாகும்.

ஆ.தகுந்த கட்டட ஒப்பந்தக்காரர் (Civil Contractor)

ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்யும் போது அவரது முந்தைய வேலைகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை ஆராய வேண்டும். ஒரு நல்ல ஒப்பந்தக்காரர் வேலையைத் தாமதப்படுத்தாமல் நேரத்திற்கு முடிப்பார். இதனால் மூலப் பொருட்களின் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவுகள் மற்றும் வீண் விரயங்கள் முற்றிலும் தவிர்க்கப்படும்.

இ. தகுந்த மேசன் (Mason / கட்டடத் தொழிலாளி)

களத்தில் இறங்கி வேலை செய்யும் மேசனின் கைவண்ணமே வீட்டின் இறுதி வடிவத்தைத் தீர்மானிக்கிறது. நேர்த்தியாகவும், செம்மையாகவும் வேலை செய்யும் கைதேர்ந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, பூச்சு வேலைகளிலோ அல்லது டைல்ஸ் ஒட்டுவதிலோ குளறுபடிகள் வராமல் தற்காத்துக் கொள்ளலாம்.

**5. முடிவுரை: விரலுக்குத் தகுந்த வீக்கமே நிம்மதி!**

"விரலுக்குத் தகுந்த வீக்கமே நல்லது" என்ற பழமொழி நம் முன்னோர்கள் நமக்குத் தந்த மாபெரும் பாடம். நமது வருமானத்திற்கும் தகுதிக்கும் என்ன முடியுமோ, அந்த அளவோடு வீட்டை வடிவமைப்பதே புத்திசாலித்தனம்.

அடுத்தவர்களுக்காகக் கட்டப்படும் ஆடம்பர மாளிகை, வாழ்நாள் முழுக்கத் தூக்கத்தைக் கெடுக்கும் "சிக்கல் இல்லமாக" மாறும். ஆனால், நமது தேவை அறிந்து, தகுந்த நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் கட்டப்படும் சிறிய வீடும் பேரானந்தம் தரும் "சிக்கனமான இல்லமாக" அமையும்.

சுவர்கள் எழுப்புவது மட்டும் வீடல்ல: அங்கு வாழும் மனிதர்க்ளின் நிம்மதியே வீட்டின் உண்மையான அழகு. எனவே, ஆடம்பரங்களைத் தவிர்ப்போம், தகுந்தவர்களைத் தேர்ந்தெடுப்போம், கடனில்லாச் 'சிக்கனமான' வீட்டில் 'சிக்கல் இல்லாத' நிம்மதியான வாழ்வை மெய்ப்பாக்குவோம்!

**இலங்கை பொறியியலாளர் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

---

# இராசிபலன்

16.06.2026
ஆனி 02, செவ்வாய்க்கிழமை
பிரதமை முற்பகல் 7.07 மணிவரை

துதியை பின்னிரவு 4.47 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.39 மணிவரை
சுப நேரம் -10.23 - 11.53 மணிவரை

இராகு காலம் -2.53-4.23 மணிவரை
சந்திராஷ்டமம்-
அனுசம், கேட்டை.

**வள்வன்**




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




பொது வாழ்வில் புகழ் கூடும், நிதி நிலை உயரும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் பயணமொன்று ஏற்படலாம்.




ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், தூரத்து உறவினர்களின் சந்திப்புண்டு, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாடு இன்பம் தரும்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொன்னான நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாடு குதூகலம் தரும், உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும்.




சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.




உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


**உன் உயர்வை உன்னைவிட உயர்ந்தவனை வைத்துப்பார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XXIV

# இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



CEYLON.


XX.—1909.

ARCHÆOLOGICAL SURVEY OF CEYLON.

NORTH-CENTRAL, CENTRAL, AND NORTHERN PROVINCES.

ANNUAL REPORT 1905.





மூலப்பிரதியை தந்துதவியவர் கலாநிதி ஆறுதிருமுருகன்

(நேற்றைய தொடர்ச்சி)

நம் நாட்டிற்கு 1948 களில் சுதந்திரம் கிடைத்த போது, இலங்கையை பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனம் செய்வதை இலக்காகக் கொண்ட சிங்கள மேலாதிக்கக் குடிகள்; கிறிஸ்தவ சமயத்தில் இருந்து மீளவும் தங்களின் தாய்ச் சமயமாகிய பௌத்த மதத்திற்கு வந்து சேர்ந்தன.

ஒரு பகுதியினர் தாம் சேர்ந்த மதத்தில் இருந்து கொண்டாலும் அவர்கள் தங்களின் தாய்ச் சமயம் பௌத்தம் என்பதை ஒரு போதும் மறக்கவில்லை என்பதுடன் அவர்கள் சிங்கள மரபை உள்ளபடி பின்பற்றுகின்றனர்.

இங்கு சிங்களப் புத்தாண்டை சிங்களக் கத்தோலிக்கர்கள் உன்னதமாகக் கொண்டாடுவதில் இருந்து நாம் கூறியதன் உண்மைத் தன்மை உணர்தற்குரியது.

இதை நாம் கூறும் போது, நம் தமிழ்ப் புத்தாண்டை சைவத் தமிழர்கள் கொண்டாடுகிறார்களேயன்றி, தமிழின் பெயரால் கூட, கத்தோலிக்க - கிறிஸ்தவ தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டை திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை என்பதற்குள் எங்கள் நிலைமை எப்படி என்பது தெரியவரும்.

ஆக, ஒரு காலத்தில் அந்நியர்கள் எங்கள் இந்து ஆலயங்களை அழித்தனர். அதனோடு அந்த நிட்டூரம் நின்று போகுமென்றால், இப்போது பௌத்தர்கள் எங்கள் ஆதிச் சிவன் கோயில்களை, பௌத்த விகாரைகள் இருந்த இடங்கள் எனக் கூறிக் கொண்டு அவற்றைக் கபளீகரம் செய்ய முற்பட்டுள்ளனர்.

இங்குதான் எங்கள் ஈழத்திருநாட்டில் இந்து ஆலயங்கள் எதிர்நோக்குகின்ற அவலங்கள் எத்தகையதென்பது தெரிய வருகிறது.

ஆம், முல்லைத்தீவு குருந்தூர் மலையில் சிவன் ஆலயமோ அன்றி இந்து ஆலயங்களோ இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லையெனத் தொல்லியல் திணைக்களம் கூறுகிறது.

ஆனால், 1905 ஆம் ஆண்டு தொல்லியல் அளவைப் பிரிவினர் வெளியிட்ட வருடாந்த அறிக்கையில்; குருந்தனூர் என்ற கல்வெட்டு உண்டு என்றும் அங்கு சிதலமடைந்த சைவக் கோயில் இருந்துள்ளதெனவும் அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், மூன்று அடி விட்டமுள்ள ஆவுடையார் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற குறிப்பும் அந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, 1905 ஆம் ஆண்டில் குருந்தூர் மலையில் சைவ ஆலயம் இருந்ததற்கான ஆதாரத்தை தொல்லியல் அளவைப் பகுதி குறித்துரைக்க, 2026 ஆம் ஆண்டில் குருந்தூர் மலையில் சிவன் ஆலயம் இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லையென இலங்கை தொல்லியல் திணைக்களம் கூறுவது, அப்பட்டமான பொய் என்பதை இதிலிருந்து எவரும் அறிந்து கொள்ள முடியும்.

இதே போன்று தான் திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் புத்தர் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்த புத்த பிக்கு ஒருவர்; கன்னியா வெந்நீரூற்று பௌத்த விகாரைக்குரிய இடம் என வாதிடலானார்.

என்ன செய்வது பௌத்தத்திற்காக ஒட்டு மொத்தச் சிங்கள இனமும் கங்கணம் கட்டிநிற்க, நம் ஈழத்திருநாட்டின் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்திற்கு எதிரான ஆக்கிரமிப்பை ஒட்டு மொத்தத் தமிழினமும் ஒன்று சேர்ந்து எதிர்க்க முடியாத அளவில் தமிழ் மக்களை குடியேற்றவாதச் சமயங்கள் பிரித்தாளுகின்றன.

ஆம், தமிழ் இனம் இன்று சமய பேதத்தால் தன் வலிமையை இழந்துள்ளது.

எனினும் இது குறித்துப் பொது வெளியில் பேசுவதற்கும் கலந்துரையாடுவதற்கும் எங்கள் மத்தியில் எவரும் இல்லை என்பது தான் மிகப்பெரிய துரதிஷ்டம்.

ஆம், நம் தமிழ் அரசியல்வாதிகள் என்போர் இரண்டு தரப்பாக தங்களை வகுத்துள்ளனர்.

அதில் ஒரு தரப்பு தாங்கள் சார்ந்த கத்தோலிக்க-கிறிஸ்தவ சமயத்துடன் தங்களின் சமய ரீதியான அரசியல் பணிகளை மட்டுப்படுத்தியுள்ளனர்.

மாறாக, சைவ சமயம் சார்ந்த தமிழ் அரசியல்வாதிகள் தங்களை சைவ சமயத்தவர்களாக ஒரு போதும் இனங்காட்டுவதில்லை.

அவ்வாறு தங்களை சைவ சமயத்தவர்களாக இனங்காட்டுவதால், கத்தோலிக்க-கிறிஸ்தவ மக்களின் வாக்குகள் தங்களுக்குக் கிடைக்காமல் போகுமென்ற கற்பனை நோய்க்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

இதன் காரணமாக அவர்கள் பௌத்த விகாரைகளை எதிர்ப்பதை தங்களின் சமயம் சார்ந்த அரசியலாக முன்வைக்கிறார்களே தவிர, மற்றும்படி சைவ ஆலயங்களை பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த பீடங்களும் ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு அவர்கள் தயாரில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1066





பழுவேட்டரையருக்கு வேறு சில சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. நள்ளிரவில் நந்தினியை அவர் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் முன்னால் கொண்டுபோய் நிறுத்தியதும், அவளைக் கண்டு சக்கரவர்த்தி அலறியதும் அதற்கு நந்தினி கற்பித்துக் கூறிய காரணங்களும் அவருக்கு அப்பொழுது நினைவு வந்தன.

"தாயே! நீ பேசுவது விளையாட்டு அல்ல என்பதை உணர்கிறேன். விதியின் விளையாட்டுத்தான் மிக விசித்திரமாயிருக்கிறது. இளையராணி உன் தமக்கை என்றால், ஆதித்த கரிகாலனுக்கும் அவள் சகோதரியாகிறாள். இந்த உறவு உனக்கு மட்டுந்தான் தெரியுமா, இன்னும் யார் யாருக்கெல்லாம் தெரியும்? சக்கரவர்த்திக்குத் தெரியுமா?

"சக்கரவர்த்தி இரண்டு நாளைக்கு முன்பு வரையில் என்னுடைய பெரியன்னை இறந்து விட்டதாகவே எண்ணிக் கொண்டிருந்தார். முந்தாநாள் அந்த மூதாட்டி நேரில் வந்த போது கூடப் பேய் என்று எண்ணி விளக்கை விட்டு எறிந்தார், பிறகுதான் நம்பினார்."

"அதைப்பற்றிக் கேட்கவில்லை, அம்மா! இளைய ராணி தன் சகோதரி என்பது கரிகாலனுக்குத் தெரியுமா?"

"அவனுக்கு இதற்குள் தெரிந்திருக்க வேண்டும். எனக்கு அவன் வாணர்குலத்து வீரர் ஒருவரிடம் ஓலை கொடுத்து அனுப்பியிருந்தான். அவரிடம் நான் சொல்லி அனுப்பினேன்."

"ஆகா! வந்தியத்தேவன் வல்லவரையனை சொல்கிறாயாக்கும்!"

"ஆம், ஐயா!"

"அவன் கரிகாலனிடம் சொல்லியிருப்பான் என்று தோன்றவில்லை. சொல்லியிருந்தாலும், கரிகாலன் நம்பியிருக்க மாட்டான். எனக்கே நம்பிக்கை உண்டாகவில்லையே? அவன் எப்படி நம்புவான்? இளைய ராணிக்கு இச்செய்தி தெரிந்திருக்க முடியாது. தெரிந்திருந்தாலும் பயனில்லை. சதிகாரர்கள் வேறு விதத்தில் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பார்ப்பார்கள். இன்றிரவு அதற்குக் கட்டாயம் முயற்சி செய்வார்கள். அம்மா! நீ தெரிவித்த செய்தி என்னுடைய பொறுப்பை இன்னும் பயங்கரமாக்குகிறது. இளையராணி நந்தினி, சகோதர ஹத்தி செய்யாமல் பாதுகாக்கும் கடமை எனக்கு ஏற்படுகிறது. நான் உடனே கடம்பூர் போகிறேன். நீங்கள் வந்த ரதத்தை எடுத்துக் கொண்டு போகிறேன். சக்கரவர்த்திக்கும், பொன்னியின் செல்வனுக்கும் ஒன்றும் நேராமல் பாதுகாப்பது உன்னுடைய பொறுப்பு!" என்றார்.

"ஐயா! தாங்கள் கவலைப் பட வேண்டாம். நான் இதோ தஞ்சைக்குப் புறப்படுகிறேன். பழையாறையிலிருந்து வாகனம் தருவித்துக் கொண்டு போகிறேன். பொன்னியின் செல்வனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. அவன் பிறந்த நாளும் வேளையும் அவனைப் பாதுகாக்கும்!" என்றாள்.

"பெண்ணே! ஜோதிடத்தை நம்பி அஜாக்கிரதையாக இருந்துவிடாதே! ஜோதிடர்கள் மனத்திற்குள் உண்மை தெரிந்திருந்தாலும் வெளிப்படையாகச் சொல்ல மாட்டார்கள்! இரண்டு பொருள் தொனிக்கும்படி ஏதேனும் கூறி வைப்பார்கள். காரியம் நடந்த பிறகு 'முன்னமே சொல்லவில்லையா?' என்பார்கள். ஜோதிடத்தை நம்பினாலும் ஜோதிடக்காரர்களை நம்ப வேண்டாம்!" என்று போகிற போக்கில் ஒரு சொல்லம்பைப் போட்டு விட்டுப் பழுவேட்டரையர் வெளியேறினார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(13.06.2026தொடர்ச்சி)

பேருந்தை விட்டுக் கீழே இறங்கி நடந்து சென்றாள். அப்போது, ஒரு முரடன் மிக விரைவாக எதிரில் நடந்து வந்தான்.

திடுதிப்பென்று, தலைமை ஆசிரியையின் கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினான். "திருடன் திருடன்" என்று தலைமையாசிரியை கத்தினாள்.

உடனே கூட்டம் கூடியது. தெருவில் சென்று கொண்டிருந்தவர்கள் அந்தத் திருடனை விரட்டிக் கொண்டு ஓடினார்கள்.

ஒருவன் திருடனை நெருங்கிப் பிடிக்கப் போனான். அப்போது அந்தத் திருடன் ஒரு கத்தியை எடுத்து நீட்டவே, அவன் பயந்து நின்று விட்டான். திருடன் ஓடிக் கொண்டிருந்தான். ஓடியவர்கள் செய்வதறியாமல் நின்று விட்டனர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தன அந்த இளஞ் சிட்டுக்கள். விருட்டென்று பாய்ந்தன. இரண்டும் பறந்து சென்று திருடனின் முகத்தில் மாறி மாறிக் கொத்தின. அவன் அவற்றின் திடீர்த்தாக்குதலை எதிர்க்க முடியாது கீழே விழுந்தான். அவன் கையில் இருந்த கத்தி நழுவிப் போய்த் தொலைவில் விழுந்தது.

தயங்கி நின்ற கூட்டத்தினர் ஓடி வந்து திருடனைப் பிடித்துக் கொண்டனர். அவனை இழுத்துச் சென்று காவல் நிலையத்தில் விட்டனர்.

தலைமையாசிரியையின் பணப்பை மீட்கப் பட்டது. அவரிடம் திருப்பிக் கொடுக்கப் பட்டது.

தலைமை ஆசிரியை அந்த இளஞ்சிட்டுகள் இரண்டையும் நன்றியோடு நினைத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளியில் மற்ற ஆசிரியைகளிடமும் அந்தச் சிட்டுக்கள் செய்த உதவியை எடுத்துக் கூறினாள். அன்று முதல் எல்லோரும் அந்தச் சிட்டுக்களை அன்போடு நடத்தினார்கள்.

ஒரு நாள் பள்ளிச் சிறுமி ஒருத்தி தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தாள்.

யாரோ சிலர் ஒரு வானில் வந்து இறங்கினார்கள். அந்தச் சிறுமியை வழிமறித்துத் தூக்கி வானிற்குள் போட்டார்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அகதிகள் என்ற பதம் இல்லாமல் எங்களை வாழ விடுங்கள்

## ஜனாதிபதிக்கான மகஜரில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாம் எமது சொந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு 36 வருடங்கள் நிறைவடைந்தும் நாம் அகதிகளாகவே வாழ்கின்றோம் என மயிலிட்டி மீள் குடியேற்ற அபிவிருத்திக் குழு தெரிவித்துள்ளது.

தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை போராட்டத்தை முன்னெடுத்த பின் யாழ். மாவட்ட செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யுத்தம் நிறைவடைந்து 17 வருடங்கள் முடிந்துவிட்டன. நாம் அகதிகள், அரசுகள் பல வந்தன போயின. நாடு முன்னேற்றம் என்ற அறிக்கைகள் ஆனால் நாம் அகதிகள்!

ஜனாதிபதி அவர்களே, அமைச்சர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே, ஆளுநரே, மாவட்ட செயலரே, அதிகாரிகளே, இராணுவத் தளபதிகளே எங்கள் நிலையைப் பாருங்கள்.

உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட 1810 என்ற இலக்கம் கொண்டு 2013 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியை நீக்குங்கள்.

மக்களின்காணிகளை மக்களுக்குக் கொடுங்கள். மக்களைக் குடியேற்றி அபிவிருத்தியுடன் நாட்டிற்கும் அவர்களுக்கும் பலன் பெறச் செய்யுங்கள். அகதிகள் என்ற பதமே இல்லாமல், எங்கள்நாடு என்று நாமும் வாழுவோம். அதற்காக மீண்டும் வேண்டுகின்றோம்.

உயர் பாதுகாப்பு (2013ம் ஆண்டு இல. 1810) என்ற வர்த்தமானி நீக்கப்படவேண்டும். மக்களின் காணிகளை மக்களுக்குக்கொடுக்க வேண்டும். ஆலயங்கள், பாடசாலைகள், தொழிற்சாலைகள், சேமக்காலைகள், விவசாய நிலங்கள், கடற்றொழில் இடங்களை முதற்கட்டமாகவாவது விடவேண்டும்.

உங்கள் அரசிற்கு 2/3 பலம் உண்டு. எனவே சாட்டுகள் கூறி காலம் கடத்த வேண்டாம்.

அறவழியில் போராடும் எமது போராட்டத்தை மதித்து எமது கோரிக்கையை எல்லோருமாக இணைந்து நிறைவேற்றுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## உலக சாதனை படைத்த பரத நாட்டிய நிகழ்வு

நாட்டின் தலைநகர் கொழும்பில் காலி முகத்திடல் வெளியில் ஒரே நேரத்தில் 5000 பேர் பங்கேற்ற பரத நாட்டியம் உலகம் முழுமையிலும் பேசுபொருளாகியுள்ளது.

ஆம், நடனம் பயிலும் மாணவர்கள் மற்றும் நடனக் கலையைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் என ஐயாயிரம் பேர் சேர்ந்து ஒரே நேரத்தில் கலந்து கொண்டு, பரத நாட்டியத்தை நிகழ்த்தியுள்ளனர்.

அதாவது நாட்டில் தமிழ் பேசும் இடங்களில் இருந்து ஐயாயிரம் பேரை தலைநகருக்கு அழைத்து வருவது – அவர்கள் அனைவரும் குறித்த பரத நடனக்கலையில் போதிய பயிற்சியைப் பெற்றிருப்பது – ஐயாயிரம் பேரும் ஒரே மாதிரியான ஆடை அணிவது என்பன சாதாரண காரியமல்ல.

இதற்காக, நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் மிகக் கடுமையாக உழைத்திருக்க வேண்டும் என்பது இருவேறு கருத்திற்கிடமில்லாத உண்மை.

காலி முகத்திடலில், **சங்கமம் – 2026** என்ற இப்பரத நாட்டியப் பெருவிழாவானது, உலகத் தமிழர்கள் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

இந்தியாவில் இடம்பெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்ட பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அவரின் வழிகாட்டலில், சங்கமம் குளோபல் அக்கடமி மற்றும் சங்கமம் லியா ஹொலிடேய்ஸ் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடந்து உலக சாதனை படைத்த இப்பரத நாட்டியமானது, எங்கள் ஈழத்தமிழர்களின் கலைப்பாரம்பரியத்தின் உன்னதமான அம்சமும் அற்புதமும் எனலாம்.

உண்மை. குரைகடல் ஓசை நித்தமும் ஒலிக்கும் காலி முகத்திடலில் பத்தாயிரம் காற் சலங்கைகள் ஒரே நேரத்தில் ஒலித்த போது, காலி முகக்கடலும் தன் அலை ஓசையை அமைதியாக்கி, ஆடற்கலையான பரத நாட்டியத்தை – அதன் ஓசை ஒலியை நிச்சயம் இரசித்து மகிழ்ந்திருக்கும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழர்களின் உயர் நடனக் கலையாகிய பரதக் கலையின் பாங்கு நம் தமிழ் மக்கள் என்ற எல்லை கடந்து, தென்பகுதி மக்களும் கண்டு மகிழ்ந்து எப்படி இஃது சாத்தியமாயிற்று என வியந்து, அற்புதம் அற்புதம் எனப் பிரமித்துக் கூறுமளவில் காலி முகத்துப் பரத நாட்டியம் அமைந்தது.

கூடவே அப்பெரும் பரத நாட்டியம் தனக்கென ஒரு தனியான வரலாற்றை – மகுடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆம், பரத நாட்டியக் கலைஞர்கள் ஐயாயிரம் பேர் ஒரே நேரத்தில் லயம், தாளம் தவறாமல் பரத நாட்டியத்தை அளிக்கை செய்ததன் மூலம் அவர்களின் அர்ப்பணிப்பு உச்சம் தொட்டது.

ஆக, எங்கள் மண்ணில் உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த காலி முகத்திடல் பரத நாட்டியம் எங்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற மனத்திடத்தையும் உறுதி செய்துள்ளது என்பது இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

## நாடளாவிய ரீதியில் 629 பேர் அதிரடிக் கைது

பொலிஸ் மா அதிபரின் நேரடி அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட சோதனை நடவடிக்கைக்கு அமைய நேற்று முன்தினம் பல்வேறு குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 18 முக்கிய சந்தேகநபர்கள் உட்பட 629 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விசேட சோதனை நடவடிக்கையின் போது 27,243 நபர்கள் பொலிஸாரால் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-7)

## தென் மாகாண முதல்வரின் தனிப்பட்ட செயலாளர் கைது

தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜயலாலின் தனிப்பட்ட செயலாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு ரூ.16.5 மில்லியன் இழப்பு ஏற்படுத்தியதான விவகாரத்தில் கொள்முதல் நடைமுறைகளை மீறி நாற்காலிகள் வாங்கப்பட்டு பல மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டு முன்னாள் முதலமைச்சர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் தொடர்ச்சியாகவே குறித்த கைது நடவடிக்கையும் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## தென்னம் மட்டைக்குள் சூட்சும மணல் கடத்தல்

### சாவகச்சேரிப் பொலிஸாரால் முறியடிப்பு

(சாவகச்சேரி)

மகேந்திர ரக வாகனத்தில் தென்னம் மட்டைகளுக்கு கீழே சூட்சுமமான முறையில் மறைத்து எடுத்துச்செல்லப்பட்ட மணல் கடத்தலை நேற்று(15) திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார்முறியடித்துள்ளனர்.

அத்துடன் வாகன சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பளைப் பிரதேசத்தில் இருந்து மேற்படி சட்டவிரோத மணல் கடத்தல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ந-7,30)

## மின்னணு சிகரெட்டுக்களுடன் கிராண்ட்பாஸில் ஒருவர் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பகுதியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக விற்பனை செய்ய முயன்ற 31 வெளிநாட்டு மின்னணு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கடற்படை மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை இணைந்து குறித்த பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கொழும்பை சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட மின்னணு சிகரெட்டுக்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பாடசாலை வான் விபத்து 17 மாணவர்கள் காயம்

(கட்டுகஸ்தோட்டை)

கண்டி - யாழ்ப்பாணம் ஏ-9 பிரதான வீதியின் கட்டுகஸ்தோட்டை, கலுகல பகுதியில் நேற்று (15) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை வான் ஒன்றும் தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளா[illegible].

இந்த விபத்து சம்பவத்தில் 17 பாடசாலை மாணவர்களும் வான் சாரதியும் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் [illegible] எதிர்த் திசையில் பயணித்த பாடசாலைவானும்கட்டுப்பாட்டை இழந்து ஒன்றோடொன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவர்கள் மற்றும் சாரதி உடனடியாக கட்டுகஸ்தோட்டை ஆதார வைத்தியசாலையிலும் கண்டி தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனி மாத இராசி பலன்கள்
# (15.06.2026 - 16.07.2026வரை)

## எதிர்பாராத தன லாபம்



**மிதுன இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு சகாய ஸ்தானாதிபதி சூரியன் இணைந்து "புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்தகுருபகவான் இப்பொழுது 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து உச்சம் பெறுகிறார். தனஸ்தானத்தில் குரு உச்சம் பெறுவதால் தனவரவு திருப்திகரமாக இருக்கும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். குடும்பத்தில் தடைப்பட்ட சுபகாரியம் தானாக நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த இடர்பாடுகள் அகலும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5 ஆம் திகதி (19.6. 2026) அன்று ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய், லாபாதிபதியாக விளங்கும் அவர், விரயஸ்தானத்திற்கு வரும் போது விரயம் அதிகரிக்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். சுபச் செலவுகளை மேற்கொள்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம்.

பத்திரப் பதிவில் இருந்த இடையூறு அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கடினமான நேரம் இது. சோதனைக் காலம் என்று கூடச்சொல்லலாம். உயர் அதிகாரிகள், உங்களுக்கு பணிச் சுமையை அதிகமாகக் கொடுப்பர். திசா புத்தி பலம் இழந்தவர்களுக்கு, உத்தியோகத்தில் இருந்து விலகிச் செல்லும் சூழல் உருவாகும்.

**சிம்ம - சுக்ரன்**

ஆனி 21 ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - விரயாதி பதியானவர் சுக்ரன். அவர் சகாய ஸ்தானத்திற்கு வரும் போது, பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க ஒரு பெரும் தொகையை செலவிடுவீர்கள். குறிப்பாக பிள்ளைகளின் மேற்படிப்பிற்காகவோ, வெளிநாடு சென்று பணி புரிவதற்காகவோ, நீங்கள் செய்யும் புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டு உங்களுக்கு கிடைத்த பங்கில் என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். சகோதர வர்க்கத்தினரின் ஆதரவு திருப்தி தரும். அதிகப் பயணங்களின் விளைவாக ஆரோக்கியத் தொல்லைகள் உண்டு.

**சனி வக்ரம்**

ஆனி 31 ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதி மற்றும் பாக்கியாதிபதியான அவர் தனது வக்ர காலத்தில் நன்மைகளைத் தொடர்ந்து செய்தாலும் ஒரு சில சமயங்களில் இனம்புரியாத கவலைக்கு ஆட்படுத்திவிடுவார். குருபகவான் வீட்டில்




சனி பகவான் சஞ்சரிப்பதால் குருவின் பார்வை அவர் மீது பதிகிறது. எனவே பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. சனியின் பார்வை 4, 7, 12 ஆகிய மூன்று இடங்களில் பதிகிறது, எனவே தாயின் உடல்நலம் சீராகும். இடம் வாங்குவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். "கட்டிய வீடு பாதியில் நிற்கின்றதே" என்ற கவலை இனி மாறும். உங்களுக்கோ, உங்கள் உடன் பிறப்புகளுக்கோ வாழ்க்கைத் துணை அமைவதற்கான வழிபிறக்கும். பயணங்கள் அதிகரிக்கும். புகழ்பெற்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். உத்தியோகத்தில் இடமாற்றம் உறுதியாகும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு வருமானம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தாமதப்பட்ட பதவி தடையின்றி கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ-மாணவிகளுக்கு கல்வியில் இருந்த குழப்பங்கள் அகலும். பெண்களுக்கு விலை உயர்ந்த பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. வீட்டில் உள்ளவர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்துகொள்வர்.

இம்மாதம் விஷ்ணு - லட்சுமி வழிபாடு வெற்றியை வழங்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 18, 19, 22, 23, ஜூலை: 5, 6, 9, 10, 15, 16.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** மஞ்சள்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் உச்சம் பெற்ற குருவோடு, 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரன் இணைகிறார். இது நன்மைதான், கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும், தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். திருமண முயற்சிகளில் இருந்த தாமதங்கள் அகலும். திடீர் திருப்பங்களால் வருமானம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் "அதைச் செய்வோமா, இதைச் செய்வோமா" என்று சிந்திப்பீர்கள், இல்லத்தில் நல்லது நடக்க, நம்பிக்கைக்குரிய நண்பர்கள் வழிகாட்டுவர். குடும்ப முன்னேற்றம் கூடும்.

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்

## உச்ச குருவால் உயர்வு



**கடக இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே குருபகவான் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கும் 9 இடத்திற்கும் அதிபதியானவர் குரு. பாக்கியாதிபதி உச்சம் பெற்று சஞ்சரிப்பதால் பல்வழியிலும் நன்மை ஏற்படும்.

நினைத்தது நிறை வேறும் நேசிப்பார்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். யோசிக்காது செய்த காரியங்களில் கூடவெற்றி கிடைக்கும். பிள்ளை வழியில் சுப செய்தி வந்து சேரும் உறவினர் வழியில் ஏற்பட்ட பிரச்சினை ஒவ்வொன்றாக அகலும் நிலைமை சீராகி நிம்மதி காண்பீர்கள். தொழில் போட்டிகள் அகலும் வர்த்தகக் கூட்டாளிகளுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் சமரசமாக முடியும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5 ஆம் திகதி (19.6.2026) அன்று ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய். லாபஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். தொழில் ஸ்தானாதிபதி லாபஸ்தானத்திற்கு வருவதால் தொழிலில் முன்னேற்றமும், கூடுதல் லாபமும் கிடைக்கும். வாடகை கட்டடத்தில் நடத்தும் தொழிலை சொந்த கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்ட வர்க ளுக்கு இப்பொழுது நல்ல நிறுவனங்களில் இருந்து கூடுதல் சம்பளம் தருவதாக சொல்லி அழைப்புகள் வரலாம். சுய ஜாதகம் பலம் பெற்றவர்கள் அதை ஏற்றுக் கொள்ளலாம். பொது நலத்தில் இருப்ப வர்களுக்கு அதிகாரத்துவ யோகம் உண்டு. என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று அதன் மூலமும் இலாபம் கிடைக்கும்.

**சிம்ம- சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன் ஆனி 21 ஆம் திகதி (05.07.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானாவர் சுக்ரன், அவர் குடும்ப ஸ்தானத்திற்கு வரும் பொழுது குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும். பிள்ளைகளின் திருமணத்தை [illegible] பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**சனி வக்ரம்**

ஆனி 31 ஆம் திகதி (15.07.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7.8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். குருவின் பார்வை சனியின் மீது பதிவதால், இந்த வக்ர காலத்தில் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. அதே சமயம் எதிரிகளின் தொல்லை இருக்கத்தான் செய்யும். எதையும் திட்டமிட்டு செய்ய




இயலாது. குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது. பண நெருக்கடி அதிகரிக்கும். சனியின் பார்வை உங்கள் இராசிக்கு 3, 6, 11 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றப் பாதையில் இருந்த இடையூறுகள் அகலும். முக்கியப் புள்ளிகளின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உடன்பிறப்புகளை அனுசரித்துச்செல்வது நல்லது. அவர்களின் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். வெளிநாட்டில் பணிபுரிவோருக்கு குடியுரிமை கிடைப்பது தாமதமாகும். இளைய சகோதரருடன் உள்ள கருத்து வேறுபாடு நீடிக்கும். இது போன்ற நேரங்களில் குலதெய்வம், இஷ்ட தெய்வ பிரார்த்தனைகளை மேற்கொள்வது நல்லது. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்ளுக்கு நினைத்தபடியே இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. கலைஞர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி உண்டு. மாணவ-மாணவிகளுக்கு படிப்பில் அக்கறை கூடும். பெண்களுக்கு சுபச் செய்திகள் வந்து சேரும். தேவைக்கேற்ற வருமானம் கிடைக்கும். இம்மாதம் குரு வழிபாடு குதூகலம் தரும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 20, 21, 26, 27, ஜூலை: 7, 8, 9, 12, 13.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** வெளிர்நீலம்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 6.9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன் இந்த இரண்டு முரண் பாடான கிரகங்களும் உங்கள் இராசியிலேயே ஒன்று கூடுவதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் விரயங்கள் அதிகரிக்கும். உத்தி யோகத்தில் பணி நீக்கம் செய்யப்படும் அளவிற்கு பிரச்சினைகள் வரலாம். உடன் இருப்பவர்களின் ஆதரவு குறையும்.கடன் சுமை கூடும். வரவு ஒரு மடங்கு வந்தால் செலவு இரு மடங்காகும் வளர்ச்சிப் பாதை யில் குறுக்கீடுகள் ஏற்படாமல் இருக்க, அசுர குருவும், தேவகுருவும் யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஏறுமுகத்தில்...

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 3.43% அதிகரிப்பை எட்டியுள்ளது.

இதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்றைய தினம் 4 பில்லியன் ரூபாவாகியது. (ந-7)

## ஒத்திவைக்கா...

நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார்.

ஒகஸ்ட் 10ஆம் திகதி பரீட்சை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், முன்னைய தேர்வு முடிவுகள் தாமதமாக வெளியிடப்பட்டதால் மாணவர்கள் மீள் பரீட்சைக்குத் தயாராக மிகக் குறுகிய காலமே கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மாணவர்களின் படிப்பு மற்றும் தயார் செய்யும் காலம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் மாணவர்களின் சமத்துவ உரிமை பாதிக்கப்படுவதாகக் கூறிய அவர், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை நாடும் வாய்ப்பும் உள்ளதாகக் குறிப்பிட்டதுடன், பரீட்சை அட்டவணையை மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தையும் கல்வி அமைச்சையும் வலியுறுத்தியுள்ளார். (ந-7)

## விஜிதமுனி...

பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையின் பொருட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இதற்காக அவர் நேற்று 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேரில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஹேமசிறி...

வுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பை எதிர் வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதி அறிவிக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு முன்னதாக உளவுத்துறை எச்சரிக்கைகள் கிடைத்த போதிலும், அவற்றைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதாக ஹேமசிறி பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பை 2026 ஜூலை 31 ஆம் திகதி அறிவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-7)

## விசாரணைகளை...

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அவற்றைச் சீர்குலைக்க முற்படக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேராதனை போதனா மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ் வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சரியான பாதையில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. வெளிவரும் சாட்சியங்களின் அடிப்படையில் சில நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மேலதிக விசாரணைகளுக்காக அவர்களுக்கு எதிராகத் தடுப்புக் காவல் உத்தரவுகள் பெறப்படுகின்றன.

இந்த விபரங்கள் அனைத்தையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், அவ்வப்போது பி அறிக்கைகள் மூலம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பணம் செய்கிறது.

அதன் அடிப்படையிலேயே சுரேஷ் சலே தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முதலாவது 90 நாட்கள் தடுப்புக் காலம் மே மாத இறுதியில் நிறைவடைந்து, தற்போது மேலும் 90 நாட்களுக்கான தடுப்புக் காவல் உத்தரவு கையெழுத்திடப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகள் விரைவுபடுத்தப்பட வேண்டுமாயின், காவலிலுள்ள சுரேஷ் சலே தமக்குத் தெரிந்த தகவல்களை விரைவாக வழங்க வேண்டும்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அவர் குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கான வழியாகும்.

தவறு செய்திருந்தால் மட்டுமே தகவல்களை மறைக்க வேண்டிய தேவை ஏற்படும். குற்றமற்றவர் என்றால் அச்சப்படாமல் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது ஊட்டச்சத்து நிலைமையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது அறிக்கைகள் மூலம் உறுதியாகியுள்ளது.

அதற்குத் தேவையான ஊட்டச்சத்துகள் முறையாகக் கிடைக்கின்றன. எனவே, அவரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க முடியும்.

தடுப்புக் காவல் உத்தரவில் உள்ள ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் சில உள்ளன. அவை அனைத்தும் சலேவுக்கு வழங்கப்படுகின்றன.

அவர் மருத்துவ சிகிச்சை கோரியபோது அது வழங்கப்பட்டது. பல மருத்துவ சிகிச்சை கோரியபோதும் அது வழங்கப்பட்டது. அவருக்கு சிறப்புச் சலுகைகளோ அல்லது புறக்கணிப்புகளோ காட்டப்படவில்லை. சாதாரணநடைமுறையே பின்பற்றப்படுகிறது.

விசாரணைகளைச் சரியாக முன்னெடுக்கும் அதிகாரி ஒருவரை நீக்குமாறு யாராவது கூறினால், அவ்வாறு குற்றம் சுமத்தும் நபரே குற்றவாளி என்பது அதிலிருந்து தெளிவாகப் புலனாகிறது." என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## செம்...

மூன்றாம் கட்டத்தின் 25ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணிகள் சட்டத்தரணி நிரஞ்சன், யாழ்.நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் உசைன் முன்னிலையில் நேற்றைய அகழ்வு இடம்பெற்றது.

இதன்போது புதிதாக 05 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் சிறுவர், குழந்தையின் என்புக் கூடுகள் உள்ளடங்கலாக 10 என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்படும் என்புக்கூடுகள் பல உடைந்த நிலையில், நேர்சீரின்மையான நிலையில் காணப்படுகின்றன. அது தொடர்பான பகுப்பாய்வின் பின்னரே உண்மை நிலைவரம் வெளி வரும். இதுவரையிலான அகழ்வு பணிகளின்போது, 360 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 351 என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நீதி அமைச்சர் மற்றும் ஐரோப்பிய தூதுக்குழுக்களின் கள ஆய்வு தொடர்பில் இதுவரை நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ந-7,33)


மஹஜன சம்பத — திகதி 2026.06.15 — சீட்டிழுப்பு இலக்கம் 6219 — C 7 4 4 2 0 9
அத சம்பத — C 4 2 0 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0794

சுப தவசக் — திகதி 2026.06.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0335 — துலாம் 34 35 45 — 1280

தன நிதானய — திகதி - 2026.06.15 — சீட்டிழுப்பு இலக்கம் - 2249 — I 05 18 44 77 I

மெகா பவர் — திகதி 15/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2567 — K 04 24 30 50 58

ஜய — 2026.06.15 — 0487 — G 5 9 5 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4461 — சீட்டிழுப்பு திகதி 15.06.2026 — A 09 39 71 74
தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்புத் திகதி 2026.06.15 — சீட்டிழுப்பு இலக்கம் 1528 — கன்னி 04 11 16 30 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிர் டென சம்பத — 15.06.2026 — வெற்றி வாரம் 0927 — V 0 4 7 4 0 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,510,104.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3193 — 25000 பணப் பரிசு 62570 — சீட்டிழுப்பு திகதி 2026.06.15 — தினம் திங்கட்கிழமை — 17 31 53 57 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.134,820,377.60

சனிதா — திகதி 15.06.2026 — வெற்றி வாரம் 5354 — 14 39 68 79 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,309,600.80 — 84420

சசிரி — வெற்றி வாரம் 1023 — சீட்டிழுப்பு திகதி 15.06.2026 — திங்கட்கிழமை — 06 32 34 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.4,128,840.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4905 — சீட்டிழுப்பு திகதி 15.06.2026 — தினம் திங்கட்கிழமை — 07 15 23 60 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,342,360.40


லக்பதி — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — M 23 07 61 70 72 — 2369 — 15.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.293,720,558.00

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 3019 — சீட்டிழுப்பு திகதி 2026.06.15 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,490,632.00 — 21 25 43 75 N

DLB — NLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவநேசன் நேசையா காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் சுற்றாடல் அமைச்சின் முன்னாள் செயலாளரும் இலங்கை அரசாங்கத்தின் பல முக்கிய ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளை வகித்தவருமான கலாநிதி தேவநேசன் நேசையா அவர்கள் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 91.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்ட யாழ்.பிராந்தியத்தில் காணாமல் போனோர் பற்றிய விசாரணைக் குழுவின் தலைவராகவும் தேவநேசன் நேசையா செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## தேவை

- சாரதி தேவை
- மில் வேலைக்கு ஆட்கள் தேவை
- பொதியிடலுக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)

தொடர்புகளுக்கு

076 440 0816

(2423)


## குற்றவாளிகளின்...

2017 செப்ரெம்பர் 27, அப்போதைய சிரேஷ்ட பிரதி மன்றாடியார் நாயகம் குமாரரட்ணம் அவர்களின் நெறிப்படுத்தலில், மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உள்ளடங்கிய ரயல்பார் தீர்ப்பாயத்தினால் 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகக் குற்றவாளிகள் மேல் முறையீடு செய்தனர். எனினும், உச்சநீதிமன்றத்தில் அரசாங்கத் தரப்பில் ஆஜரான மேலதிக பிரதி மன்றாடியார் நாயகம் அசாட் நவாவி, மேல்நீதிமன்றின் தீர்ப்பு முற்றிலும் சரியானது மற்றும் சட்டப்பூர்வமானது என்பதை வலுவான வாதங்கள் மூலம் நிரூபித்தார்.

இதனை முழுமையாக ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் குழாம், "சுவிஸ் குமார்" உள்ளிட்ட 4 முக்கிய குற்றவாளிகளுக்கான மரண தண்டனையைக் கடந்த மே மாதம் 6ஆம் திகதி உறுதி செய்து தீர்ப்பளித்தது. போதிய சாட்சியங்கள் இல்லாததால் இருவர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தின் இந்த இறுதித் தீர்ப்பை குற்றவாளிகளுக்கு வாசித்துக் காட்டுவதற்காக, கடந்த மாதம் 25 ஆம் திகதி அன்று வழக்கு திகதியிடப்பட்டிருந்தபோதும், மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர், நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னதாகவே சிறைச்சாலைக்குள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டமையால் அன்றைய வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று குற்றவாளிகள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றில் நிகழ்நிலை ஊடாக மற்றும் நேரடியாக முற்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி சதீஷ்கரன் அவர்கள், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பகிரங்கமாக வாசித்து, குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை மீண்டும் உறுதி செய்தார்.

இதன்போது வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதிகளான கா.நசிகேதன் மற்றும் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆகியோர் மன்றில் பிரசன்னம் ஆகியிருந்தனர்.

விடுவிக்கப்பட்ட 4 ஆம் மற்றும் 8ஆம் எதிரிகள் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ரகுபதி அவர்கள் பிரசன்னமாகியிருந்தார். (ந-7,33)

## வவுனியா...

படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வைரவ புளியங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் தனியார் தாதியர் கல்லூரி என்ற பெய ரில் இயங்கி வந்த நிறுவனம் ஒன்றில் தாதிய கற்கைநெறிகளை பயில்வதற்காக மாணவர்களிடம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்காக ஒவ்வொரு மாணவர்களிடம் இருந்தும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பணம்பகுதி பகுதியாக அறவிடப்பட்டதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

பதிவுகள் மேற்கொள்ளும் போது கற்கை நெறி முடிவில் அங்கீகாரமுள்ள சான்றிதழ் வழங்கப்படுமெனக் கல்லூரி நிர்வாகிகளால் மாணவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

எனினும் கற்கை நெறிமுடிவடைந்து நீண்ட நாட்களாகியும் அந்தச் சான்றிதழ் வழங்கப்படவில்லைனமாணவர்கள் ஆதங்கம் வெளியிட்ட போது அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து மாணவர்களால் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா பொலிஸார் கல்லூரியில் கடமை புரிபவர்கள் எனக் கூறப்படும் ஐவரைக் கைது செய்திருந்தனர். மேலதிக விசாரணைக்களுக்காகப் பாதிக்கப்பட்ட மாணவர்களும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றிருந்தனர். (ந-7,250)

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 - 09 - 1964



உதிர்வு 26 - 06 - 2025

அமரர்

## வேலாயுதம் தர்மகுலசிங்கம் (அப்பன்)

திதி: பிரதமை (16.06.2026)

எம் வாழ்க்கையின் தெய்வம் – அப்பா
எம் வெற்றியின் இரகசியம் – அப்பா
தம்மை வருத்தி எம்மை
தன்னம்பிக்கையோடு வாழ வைத்தவர் – அப்பா
அறிவொளி ஊட்டி
அகிலம் சிறக்க வைத்தவர் – அப்பா
உம் நினைவால் வாடுகிறோம் அப்பா...

(2422)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் இன்று 16.06.2026 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்
குடும்பத்தினர்.


## ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான No1 ஒரு நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகளை ஒவ்வொரு வாரமும் Golden chicks farm இடமிருந்து நீங்கள் கொள்வனவு செய்ய முடியும்.



விலை 150/=(பேசித் தீர்மானிக்கலாம்).

தரமான ஒரு நாள் தனி ஊர் சேவல் குஞ்சுகள்- 130/=,

தனி பேடு குஞ்சுகள்- 230/= ( விலை பேசித் தீர்மானிக்கலாம்)

(2420)

0769488642 , WhatsApp - 0772986326

இடம் – சாவகச்சேரி, யாழ்ப்பாணம்



## உலகளாவிய சந்தையில்

தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்த விரும்பும் தொழில்முனைவோர்களுக்காக

PayPal & Freelancing

AWARENESS PROGRAM




Commercial Bank ஆனது SLIIT NORTHERN UNI உடன் இணைந்து வழங்குகிறது.

இந்நிகழ்வில்,

- PayPal கணக்கை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல்
- சர்வதேச வாடிக்கையாளர்களிடமிருந்து பாதுகாப்பான பணப்பரிவர்த்தனைகளைப் பெறுதல்
- உலகளாவிய வருமானத்தை திறம்பட நிர்வகித்தல்

திகதி: புதன்கிழமை, 17 ஜூன் 2026

நேரம்: மதியம் 2.00 மணி – 4.00 மணி வரை

இடம்: SLIIT NORTHERN UNI No. 239, Arasadi Road, Kantharmadam, Jaffna

Call & Reserve Your Seat - 021 7534 807

LIMITED SEATS ARE AVAILABLE!

(C-5845)

NORTHERN UNI EXPERIMENT. EXPERIENCE. EXCEL | COMMERCIAL BANK



## வெறுப்பு யாருக்கு எதிராகவும் திரும்பலாம்

நினைவில் கொள்ள :

நீங்கள் வெறுப்பூட்டும் தகவலை பகிரும் போது

நாளை அதே வெறுப்பின் இலக்காக நீங்களும் மாறலாம்.

நிகழ்நிலையில் உள்ள தீங்கு விளைவிக்கும் கதைகள் பெரும்பாலும் கோபம், பயம் மற்றும் சமூகப் பிரிவினையை உருவாக்கும் அரசியல் அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின் றன.

அதை தொடர்ந்தும் பரப்பாதீர்கள்.

வெறுப்பை அதன் முளையிலேயே கிள்ளி எறியுங்கள்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org